## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.8/2019

2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 19 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | ஜாதி | : | |
| த.பெ | : | முத்துச்சாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 55/2025 |
| தேதி | : | 19.09.2025 | | | |

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நீங்கள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 3 ம் வாதி தான் ஏப்ரல் 2019 ல் பட்டிவீரன் பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் அது தவறான தகவல் ஆகும். எனவே தவறான தகவலின் அடிப்படையில் இந்த வழக்குரையை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 1 வது வாதியும், 3 வது வாதியும் காவல் துறையில் பணியாற்றுகிறார்கள் என்றால் சரிதான். ஜீன் 2019 ல் நீங்கள் பட்டிவீரன் பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த போது 1 வது வாதி காவல்நிலைய பணியில் இருந்தார் என்றால் சரியல்ல.

பரதிவாாதிகளை தொந்தரவு செய்ய வேண்டும் என்பதற்காக காவல்துறையில் பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. 20.08.2019 ம் தேதியன்று பிரதிவாதி அடியாட்களுடன் வந்த உங்களை மிரட்டவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் சர்வே எண்.1339/5A2 ல் சொத்துவிபரத்தின் சொல்லியுள்ள அளவுகளின் படியோ அல்லது அதற்கு கூடுதலாகவோ பாதை எதுவும் கூடுதலாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. பாதை எவ்வளவு அகலம் நீளம் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சொத்துவிபரத்தில் சொல்லியுள்ள சர்வே எண்ணிற்கு தென்புறத்தில் கிழக்கு பக்கமும், மேற்கு பக்கமும் ஒரு போர் உள்ளது என்றால் உள்ளது அதை ஒதுக்கி தான் பாதை போட்டுள்ளோம். அந்த போரை சரவணன் தான் போட்டார் என்றால் சரிதான்.

நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் சொல்லியுள்ள பாதை உங்களுடைய சர்வே எண். 1341/1 B2 மற்றும் சர்வே எண்.1341/3 B க்கு செல்வதற்கான பாதை இல்லை என்றால் சரியல்ல. சரவணனுக்கு நீங்கள் 90 செண்ட் மட்டும் தான் கிரையம் கொடுத்துள்ளீர்கள் என்றால்

சரியல்ல. சரவணன் இந்த பிரதிவாதிக்கு அதே 90 செண்டை தான் எழுதிகொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

சரவணனை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக நீங்கள் சேர்க்கவில்லை என்றும் அவரை சேர்த்தால் தான் உண்மை விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. மருதா நதி கிளை வாய்க்கால் வழியாக உங்களுடைய நிலத்தின் வழியாக கணேசபுரம் மற்றும் அய்யம்பாளையம் செல்லலாம் என்றால் நடைபாதை மட்டும் உள்ளது. வழக்கு சொத்தில் உங்கள் அனுபவத்தை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

நீங்கள் சுவாதீனத்தை நிருபிப்பதற்கு புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நீங்கள் சுவாதீனத்தில் இல்லாததால் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor